சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

**MCOP.No.02/2023**

மனுதாரர் தரப்பு சாட்சி எ.ம.சா.1 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. J. சரஸ்வதி, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | திரு. கதிரவன் | த/பெ: | சுப்பிரமணியன் |
| வயது: | | ஊர் : | |
| தொழில்: | | முகவரி: | |
| தேதி: | 23.09.2025 | தாலுக்கா : | |

**முதல் விசாரணை…**

இம்மனுவில் 1 ஆம் எதிர்மனுதாரர் ஆவேன். நான் என் முதல் விசாரணையை எழுத்து மூலமாக முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்ட விபரங்கள் எனக்கு நன்கு தெரியும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

| வ. எண் | நாள் | ஆவணவிபரம் | ஆவணத் தன்மை | |
|---|---|---|---|---|
| 1 | 09.11.2020 | ஓட்டுநர் உரிமம் | நகல் | எ.ம.சா.ஆ.1 |

மனுப்படி உத்தரவிட வேண்டுகிறேன்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

இவ்வழக்கு விபத்தில் என் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் இருச்சக்கர வாகனத்தை அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டிச்சென்றதால் தான் இருச்சக்கர வாகனத்தில் உட்கார்ந்திருந்தவர் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. என் மீது பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்கில் என்பெயர் கதிரேசன் என குறிப்பிடப்பட்டுள்ளது

என்றால் சரிதான், ஆனால் என் பெயர் கதிரவன். குற்ற வழக்கு சம்பந்தமாக குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதத்தொகை செலுத்தியுள்ளேனா என்றால் இல்லை. விபத்து எனது கவனக்குறைவால் ஏற்பட்டதால் மனுதாரருக்கு நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நஷ்ட ஈட்டு தொகை கொடுக்க கூடாது என்பதற்காக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து எனது கவனக்குறைவால் ஏற்பட்டதாக முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே 2 ஆம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.